22.04.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் மழை: வானிலை அறிவிப்பு




தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: குமரி முதல் லட்சத் தீவுகள் வரையிலான பகுதிகளில், மேலடுக்கு சுழற்சி காணப்படுகிறது. இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

## காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தால் 739 கிராமங்கள் பயன்பெறும்

காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்(பகுதி 2) செயல்பாட்டிற்கு வரும் போது, 739 வழியோர கிராமங்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் விநியோகம் செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் தெரிவித்தார்.தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் காவிரி கூட்டு குடிநீர் திட்ட(வேடசந்தூர் பகுதி 2)

பணிகள் மற்றும் நீருந்து நிலையங்களை, மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டார். கோவிலூர், வேடசந்தூர், குஜிலியம்பாறை மற்றும் ஒட்டன்சத்திரம் சுற்றுப்புற பகுதிகளில் ஆய்வு நடத்திய பின், அவர் தெரிவித்தது: காவிரி கூட்டுக் குடிநீர் திட்ட(பகுதி 2) பணிகளை முடிப்பதற்கு 2015 மே 31ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பணிகள் நிறைவடைந்த பின், 739 வழியோர கிராமங்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் விநியோகம் நடைபெறும் என்றார் அவர்.ஆய்வின் போது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் என்.ஜீவா, உதவி செயற்பொறியாளர்கள் சிவசாமி, சங்கரபாண்டி, உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

**நாமகிரிப்பேட்டையில் ரூ.70 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**

நாமகிரிப்பேட்டை வேளாண்மை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை ரூ.70 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் போனது.நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளைஏலத்துக்குக் கொண்டு வந்தனர்.தலா 65 கிலோ கொண்ட 1,590 மூட்டைகள் ஏலத்துக்குக் கொண்டு வரப்பட்டன. விரலி ரகம் ஒரு குவிண்டாலுக்கு குறைந்த பட்சம் ரூ.8,169-க்கும், அதிகபட்சம் ரூ.9,561-க்கும்

ஏலம் போனது. உருண்டை ரகம் குறைந்தபட்சம் ரூ.7,029-க்கும், அதிகபட்சமாக ரூ.8,339-க்கும் ஏலம் போனது. பனங்காலி குறைந்தபட்சமாக ரூ.12,339-க்கும், அதிகபட்சமாகரூ.20,071-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.70 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் நடைபெற்றது.

**"மீன் வளர்ப்பிலும் விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும்'**

உள்நாட்டு மீன் வளர்ப்புக்கு தமிழக அரசு பல்வேறு வகையில் உதவிகரமாக இருந்து வருவதை பயன்படுத்திக்கொண்டு மீன் வளர்ப்பில்

விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன்.திருவாரூர் மாவட்ட மீன்வளத் துறை மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் இணைந்து மன்னார்குடியில் மீன் வளர்ப்போர் விழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும்கண்காட்சியை செவ்வாய்க்கிழமை நடத்தின.இதைத் தொடங்கிவைத்து மாவட்ட ஆட்சியர் பேசியது:மீன் வளர்ப்போர் நலச்சங்கம் மீட்டெடுக்கப்பட்டு முதலில் 60 பேருடன் தொடங்கப்பட்டது. இதில், தற்போது அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இணைந்து வருவதுமகிழ்ச்சி அளிக்கிறது. மேற்குவங்கம் உள்பட வட மாநிலங்களில் ஜலபூஷ்பம் என அழைக்கப்படும் மீன் சைவ உணவாக மாறி வருகிறது. வடமாநிலங்களில் ஒருவரின்செல்வாக்கை நிர்ணயிக்கும் சக்தியாக அவர் அமைத்திருக்கும் பண்ணை குளங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. மேலும், மாப்பிள்ளை வீட்டாரிடம் எத்தனை மீன்வளர்ப்பு பண்ணை குட்டைகள் உள்ளன என்பதைதான் பெண் வீட்டார் திருமணத்துக்கான முதல் தகுதியாக பார்க்கின்றனர். விவசாயப் பணியுடன் மீன், ஆடு, கால்நடை வளர்ப்புகளிலும் விவசாயிகள் ஆர்வம் செலுத்த வேண்டும். உடல் நலனுக்கு கேடு ஏதும் விளைவிக்காத உணவு மீன் என்பதைமக்களுக்கு உணர்த்த வேண்டும். மீன் சாப்பிடுவதை ஊக்கப்படுத்துவதுடன் உற்பத்தி அதிகரிப்பதற்கான உத்தியை கையாள வேண்டும் என்றார் அவர்.நிகழ்ச்சியில், வலை மானியமாக தலா ரூ. 5 ஆயிரம் என 4 பேருக்கும், மீன் பண்ணைக் குட்டை எந்திரம் தலா ரூ. 60 ஆயிரம் என 4 பேருக்கும் மாவட்ட ஆட்சியர்

வழங்கினார். விழாவில், மீன்வளத் துறை இணை இயக்குநர் எம். சுப்புராஜ், உதவி இயக்குநர் திருநாவுக்கரசு, வேளாண்மை இணை இயக்குநர் க. மயிவாகணன், மன்னார்குடிகோட்டாட்சியர் எஸ். செல்வசுரபி, கடல் உணவுப்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு இயக்க துணை இயக்குநர் விஜயகுமார், மாவட்ட நபார்ட்டு வங்கி மேலாளர் ரவிசங்கர்ஆகியோர் பங்கேற்றனர்.

## கால்நடை வளர்ப்போருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி

பாகூர் மற்றும் கரையாம்புத்தூர் பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையம் சார்பில் கால்நடை வளர்ப்போருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாய, கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு குழுக்களுக்கு தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒருபகுதியாக சேலியமேடு மற்றும் கரையாம்புத்தூர் உழவர் உதவியகத்துக்கு உட்பட்ட கால்நடை வளர்ப்போர் ஆத்மா குழுக்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. வேளாண் அலுவலர் பரமநாதன் வரவேற்றார். ஆத்மா திட்ட இயக்குநர் ரவிப்பிரகாசம் தலைமை தாங்கி ஆத்மா திட்டம் பற்றி விளக்கினார். பாகூர் கோட்ட இணை வேளாண் இயக்குநர் சிவசங்கரமுருகன் சிறப்புரையாற்றினார். நல்லப்பரெட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சீனுவாசன் நிலத்தில் கொட்டில் ஆடுகள் வளர்ப்பு பற்றியும், புதுவை பான்லேவில் பாலில் மதிப்பு கூட்டல் பற்றியும் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் தீவன புல் பற்றியும் செயல்விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. சேலியமேடு, குடியிருப்புபாளையம், பனையடிகுப்பம், கரையாம்புத்தூர், சின்ன கரையாம்புத்தூர், மணமேடு மற்றும் கடுவனூர் கால்நடை விவசாயிகள் கலந்துகொண்டனர் இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் கங்காதுரை, ஆத்மா மேலாளர்கள் பக்தவத்சலம், மருத்துவர். செல்வமுத்து, விவசாய ஆலோசனை குழு தலைவர் கோகுலா மற்றும் அலுவலக ஊழியர்கள் செய்திருந்தனர்.

## செம்மை கரும்பு சாகுபடி: விவசாயிகளுக்குப் பயிற்சி

வேளாண் துறை, உழவர் உதவியகம் மற்றும் பண்ணை தகவல் தொடர்பு மையம், ஆத்மா திட்டத்தின் கீழ் செவ்வாய்க்கிழமை கரிக்கலாம்பாக்கதத்தில் செம்மை கரும்பு சாகுபடி பற்றிய பயிற்சி முகாம் நடைபெற்றது. கூடுதல் வேளாண் இயக்குநர் ரவி பிரகாசம் தலைமை வகித்தார். துணை வேளாண் இயக்குநர் சிவசங்கரமுருகன் வரவேற்றார்.

கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் இந்திராணி (விதை தொழில் நுட்பத் துறை) மற்றும் துரைசாமி (பூச்சியியல் துறை) ஆகியோர் நீடித்த கரும்பு சாகுபடி குறித்த உழவியல் தொழில் நுட்பங்கள் மற்றும் கரும்பின் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் உர நிர்வாகம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

மேலும் கரும்பின் நவீன நாற்றங்கால் அமைப்பது குறித்தும் கரும்பு சாகுபடியில் நிறுவனத்தின் பங்களிப்பு குறித்தும் இஐடி பாரி கரும்பு ஆலையைச் சேர்ந்த கரும்பு அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

நடப்பாண்டு, "ராஷ்டிரிய கிரிஷ் விக்காஷ் யோஜனா' என்ற மத்திய அரசின் திட்டத்தின் மூலம் கரும்பு பயிரிடும் விவசாயிகள் இந்த செம்மை கரும்பு சாகுபடி செய்ய அரசு மானியம் பெறும் திட்டம் பற்றி வேளாண் அதிகாரி அருணா எடுத்துரைத்தார். இதன்படி சுமார் 2.5 ஏக்கர் கரும்பில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க ரூ.1 லட்சத்தில் சாகுபடி செய்வதற்கான இடு பொருள்கள் ரூ.50 ஆயிரம் மானியமாக வழங்கப்படும்.

ஏற்பாடுகளை வேளாண் தொழில் நுட்பமேலாளர் பெரியசாமி, உதவி வேளாண் அலுவலர் பழனிவேல், விரிவாக்க பணியாளர் நறுமலர், ஊழியர் ராமசாமி ஆகியோர் செய்திருந்தனர்.

தினமலர்

**தகுதியில்லாத நிலத்திலும் சாதிக்கலாம்**



மண்ணின் கார, அமில தன்மை 5 முதல் 6.3 வரை இருந்தால் சாகுபடிக்கு ஏற்றதாக இருக்கும் என்பது அறிவியலாளர்கள் கருத்துஆனால் . அதிகமான அமில, காரத்தன்மை கொண்ட மண்ணையும், வருவாய் கொடுக்கும் பூமியாக மாற்றியுள்ளார் கன்னிவாடி விவசாயி ராஜசேகரன்,58. அதிகரித்து வரும் மின்தேவையை சமாளிக்க உதவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இவருக்கு நிலத்தின் வடிவத்தில் கைகொடுத்துள்ளதுதிண்டுக்கல் மாவட்டம்., செம்பட்டி ஓரியன்ட் கிரீன் பவர் கம்பெனி, தென்னை நார்க்கழிவு, விறகு மூலம் மின் உற்பத்தியை துவக்கியதுதட்டுப்பாடு ., விலை உயர்வால் அவற்றை தொடர்ந்து பயன்படுத்துவதில் சிக்கல்கள் உருவாயினகுறைந்த செலவில் மின் . உற்பத்திக்காக, கால்நடைத் தீவன வகை கோ-கம்பு நேப்பியர்)4) புல்லை பயன்படுத்த முடிவு செய்தனர். இதனை சாகுபடி செய்ய விவசாயிகள் பலர் தயங்கியபோது, கன்னிவாடி விவசாயி ராஜசேகரன் தைரியமாக முன்வந்தார் .2012 ஆகஸ்டில், 3.75 ஏக்கரில் சாகுபடி செய்தார் . முதற்கட்டமாக இரு மடங்கு லாபம் பெற்றபோதும், கடும் வறட்சியால் அடுத்தமுறை மகசூலில் மந்தம் ஏற்பட்டதுஎதுவுமே சாகுபடி செய்ய . முடியாத இந்த நிலத்தில், மாற்று சாகுபடி எதையும் அவர் துவங்கவில்லைபலமாதங்களாக சருகாய் காய்ந்த புல் தட்டைகள் ., அப்போது பெய்த மழையால் மீண்டும் உயிர்பெற்றனவறட்சி தாங்கும் . பயிராய் வளர்ந்த இந்த புல்ரகம், இவருக்கு இறைவன் தந்த வரமாய் மாறியது. அவர் கூறுகிறார்: எனது நிலத்தில் மண் ஆய்வின்போது அமில, காரத்தன்மை 8.4 சதவீதம் எனத் தெரிந்ததுசத்துக்கள் . பற்றாக்குறையால், மக்காச்சோளம், பருத்தி, வெள்ளரி, தர்பூசணி என அடுத்தடுத்து சாகுபடியை மாற்றியும் பலன் இல்லைஓரியன்ட் கிரீன் . பவர் நிறுவன அதிகாரிகள், மின்உற்பத்திக்கான புல் சாகுபடி பற்றிக் கூறினர்நாற்றுக் கரணை ., மேல், அடி உரங்கள், மருந்து, வளர்ந்தபின் வெட்டி, எடுத்துச் செல்லும் பொறுப்புகளை அவர்களே ஏற்றனர் . நிலத்தை தயார்படுத்தல், நடவு, நீர் பாய்ச்சுதல் போன்ற செலவினங்கள்

மட்டுமே இருந்ததுஊடுபயிராக ., அகத்தி வளர்ப்பும் நடக்கிறது. அறுவடைக்குப்பின், 45 சதவீத ஈரப்பதத்துடன் பெறப்படும் புல், பாய்லரில் எரித்து நீராவியாக பெறப்படுகிறதுஇதனை டர்பைன் . கலத்தில் செலுத்தி, மின் பெறப்படுகிறதுஇரண்டு டன் புல்லில் இருந்து . .உற்பத்தி செய்கின்றனர் (ஆயிரம் யூனிட்)ஒரு மெகாவாட் முதற்கட்டமாக எனக்கு ரூ.58,542 ரூபாய் செலவில், ரூ ஒரு லட்சத்து.18 ஆயிரம் கிடைத்ததுபோதிய மழையின்றி சொட்டு நீர்ப்பாசன முறையில் . வினியோகிக்கக்கூட தண்ணீர் இல்லைஎந்த சாகுபடிக்கும் ஏற்பில்லாத . மண் என்பதால், காய்ந்து சருகான தட்டைகளை தீவனத்திற்கு விற்க முடிவு செய்தேன். அதிகாரிகளின் ஆலோசனையால் முடிவை ஒத்திவைத்தேன்ஒரு ஆண்டு கடந்தபோது காய்ந்து சருகான தட்டைகள் . இரு மாதங்களுக்கு முன் பெய்த மழையால் மீண்டும் வேர்பிடித்து வளரத்துவங்கின .தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன . தாமதமானபோதும், எவ்வித முதலீடும் இல்லாமல் மீண்டும் மகசூல் கிடைத்துள்ளது," என்றார் இவருடன் பேச .94435 05209. -எல்தாமோதரன்.,கன்னிவாடி.

**ஏக்கருக்கு 4 லட்சம் வருமானம் தரும் கேந்தி மலர் சாகுபடி**



"உழுதவன் கணக்கு பார்த்தால் தார் கம்பு கூட மிச்சமாகாது" என்பது கிராமப்புற விவசாயிகள் கூறுவதுண்டுஆனால் இவற்றை எல்லாம் . பொய்யாக்கி ஏக்கருக்கு4 லட்சம் வருமானம் எடுக்கிறேன் என்று கர்வத்துடன் கூறுகிறார் ஒரு சாதனை பெண் விவசாயி சிவகாமி விருமாண்டி. எப்படிஇவர் வருடந்தோற :ம் கேந்திமலர் சாகுபடி செய்கிறார்மேக்சிமா எல்லோ வீரிய ஒட்டு"" ஈஸ்வெஸ்ட் நிறுவனத்தின் ."

என்ற ரகத்தை ஏக்கருக்கு 10 ஆயிரம் செடிகள் நான்கு உழவு முடிந்தவுடன் 2x2 அளவில் பார் அமைத்து நடவு செய்தார் செடி நட்ட .40 நாளில் முதல் அறுவடை வந்தது பூ .வந்த நாள் முதல் 100 நாட்கள் அறுவடை செய்யலாம் ஏக்கருக்கு .10 டன் பூ வந்தது .1 கிலோ குறைந்த பட்ச விலை ரூ.40. அதிக பட்சம் ரூ.160. இந்த பூக்களுக்கு வருடத்தில் அனைத்து நாட்களிலும் நல்ல வரவேற்புள்ளது. ஏக்கர் /4,00,000. (10,000 x 50 = 5,00,000). வருமானம் .ரூ -5,00,000. செலவு -1,00,000. நிகர வருமானம் .ரூ -4,00,000. செலவு - உழவு :4000, நாற்று (ரூ)30,000, மருந்து - உரம் +16,000, கமிஷன் -50,000, மொத்தம் 1,00,000. இவர்கள் பூப்பறிப்பதற்கு கூலி ஆட்கள் விடுவதில்லை. இவருக்கு இவர் கணவர் விருமாண்டி D.Agri தொழில்நுட்ப விவரங்களை கற்றுத் தருகிறார்இவர் . இந்த செண்டு பூ வீரிய நாற்றுகளை தமிழ்நாடு முழுவதும் வினியோகம் : தொடர்புக்கு .செய்கிறார்96262 89640

**சின்ன சின்ன செய்திகள்**



**கறுப்புக்கொள்ளு:** அனுபவ விவசாயி விழுப்புரம் மாவட்டம், துளுக்கபாளையம் கிராமத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் கூறுவது. கொள்ளை விதைத்து விட்டு அறுவடைக்குப் போனால் போதும். மானாவாரியில் கம்பு விதைச்சா விளைச்சலுக்கும் விலைக்கும் உத்திரவாதம் கிடையாது. ஆனா கொள்ளு விதைச்சா விளைச்சலுக்கும் விலைக்கும் உத்தரவாதம் இருக்கு. அதிகம் கறுப்பு கொள்ளுக்கு நல்ல தேவை இருக்கு. வழக்கமான கொள்ளு விதைகளைப் பயன்படுத்தும் முறையில் கறுப்புக்கொள்ளு விதைகளையும் சாம்பார், ரசம், துவையல்னு பயன்படுத்தலாம்.கறுப்பு கொள்ளு சாகுபடி காலம் 120 நாட்கள்.

கார்த்திகைப் பட்டம் ஏற்றது. தண்ணீர் தேங்கி நிற்காத எல்லா நிலங்களிலும் சாகுபடி செய்யலாம். இரண்டு மூன்று உழவு செய்து கடைசி உழவுக்கு முன்பு ஏக்கருக்கு 6 முதல் 8 கிலோ விதைகளைப் பரவலாக விதைத்து விட வேண்டும். மண்ணிலும், காற்றிலும் இருக்கும். ஈரப்பதத்தில் விதைகள் 5 முதல் 7 நாட்களில் முளைப்பு எடுத்து விடும். 20 முதல் 25 நாட்களில் ஒரு களை எடுக்க வேண்டும். அதற்கு மேல் செடிகள் வளர்ந்து கொடிகளாகப் படர ஆரம்பிக்கும். மானாவாரி என்பதால் கிடைக்கும் மழைத்தண்ணீரை வைத்தே வளர்ந்து விடும். 80ம் நாளில் பூவெடுத்து 90ம் நாளில் காயாக மாறி 120ம் நாளில் காய்கள் முற்றி அறுவடைக்கு வந்து விடும். கதிர் அரிவாள் கொண்டு அறுவடை செய்து இரண்டு நாட்கள் காயவைத்து கம்பு கொண்டு தட்டினால் விதை தனியாக வந்து விடும். விவசாயி 40 சென்ட் நிலத்தில் 200 கிலோ மகசூலாக எடுத்துள்ளார். ஒரு கிலோ 65 ரூபாய்க்கு விற்பனை செய்து 13 ஆயிரம் ரூபாய் வரை பெற்றுள்ளார். செலவு 3 ஆயிரம் ரூபாய் ஆகிறது. சித்த மருத்துவம் செய்கிறவர்களும், இயற்கை அங்காடி நடத்துறவங்களும் விரும்பி வாங்குகிறார்கள். மேலும் விபரங்களுக்கு பாலசுப்பிரமணியன், அலைபேசி:9843488990.

**நிழல்வலைக் கூடாரங்களில் காய்கறி சாகுபடி:** ஆண்டு முழுவதும் பருவ நிலை பாதிப்பின்றி அனைத்து பருவங்களிலும் காய்கறி உற்பத்தியை மேற்கொள்ளலாம். இதன் மூலம் நல்ல தரமான உற்பத்தி மற்றும் உயர்ந்த விளைச்சலைப் பெறலாம். பூச்சி தாக்குதல் மற்றும் வைரஸ் நோய்களை கட்டுப்படுத்தலாம். நுண்ணிய தட்பவெப்பம் நிலவுவதால் பயிர் சேதம் குறைக்கப்படுகிறது. நிழல்வலைக் கூடாரங்கள் அமைப்பதற்கு பாலிதீன் விரிப்புகளைப்பயன்படுத்தலாம்.தக்காளி மற்றும் மிளகாய் பயிர்களை இந்த நிழல்வலைக் கூடார முறையில் நன்கு உற்பத்தி செய்யலாம். அதற்கு தேவையான நிழல் அளவு சுமார் 35 சதவீதம் ஆகும். நாற்றுகள் 80x40x60 செமீ இடைவெளியில் நட வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட உர அளவாக 50:250:50 கி/எக்டர் தழை, மணி, சாம்பல் சத்துக்களை அடியுரமாக இட வேண்டும். மேலும் விபரங்களுக்கு

எம்.எஸ்.அனீசாராணி, ஜெ.ரேணுகாதேவி, மு.பாபு, இ.கண்ணையன், க.ராஜா, க.சக்திவேல், க.தனலெட்சுமி, காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர், கடலூர்-607 102. போன் : 04142 - 212 538, 275 222. **பருத்தி ரகம் ராகா BG II:** அனுபவ விவசாயி வே.செல்வராஜ், த/பெ.வேலுச்சாமி, பெரியகோட்டை போஸ்டு, (வழி) சத்திரப்பட்டி, ஒட்டன்சத்திரம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் - 624 614. அலைபேசி : 99941 05383. மொத்தம் 3.5 ஏக்கர் கலாஷ் சீட்ஸ் வழங்கும் ராகா பிஜி ஐஐ பருத்தி சாகுபடி செய்துள்ளார். பெருசு பெரிசா காய் வெடிச்சு பஞ்சு நல்லசைஸில்பூத்திருக்கிறது. தொட்டதும் கையோட வருது. சென்ற வருடம் பயிரிட்டிருந்த பருத்தியோட அனுபவ அடிப்படையில் இந்த வருடம் பருத்தி மகசூல் 20 குவிண்டால் வரை வரலாம் என்று சொல்கிறார் விவசாயி. மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள விஜயகுமார் - 98429 60815, பி.துரைராஜ், திண்டுக்கல் - 85080 88908, எம்.மகேஷ்குமார் தேனி - 98730 95628, பி.பிரபு சேலம்- 99768 68304, எம்.மகேஷ் கோவை-88837 62629.- **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

---

**கோடை மழையால் ஏலக்காய் சாகுபடி தப்பியதுகைகொடுத்தது !**
**கோடை மழை**

கம்பம் : இடுக்கி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள ஏலக்காய் சாகுபடிக்கு தற்போது பெய்து வரும் கோடைமழை கை கொடுத்துள்ளது.

இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி செய்யப்படும் ஏலக்காய் வடமாநிலங்கள் மற்றும் ஏற்றுமதி மூலம் விற்பனை செய்யப்படுகிறது. ஏலக்காய் பயன்பாட்டில் வளைகுடா நாடுகள் முன்னிலை வகிக்கின்றன.பொதுவாக கோடையில் ஏலத்தோட்டங்களுக்கு சிக்கல் ஏற்படும். மழை இல்லாமல் செடிகள் வாடும். கிணறுகளில் உள்ள தண்ணீர் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே பயன்படும். அதற்கு பிறகு ஏலச்செடிகள் கருகத் துவங்கி விடும். இந்த ஆண்டும் ஏல விவசாயிகள் கோடையில் எப்படி செடிகளை காப்பாற்ற போகிறோம் என்ற கவலையில் இருந்தனர்.இந்நிலையில் கடந்த சில வாரங்களாக இடுக்கி மாவட்டத்தில் நல்ல மழை பெய்து

வருகிறது. இதனால் ஏலத்தோட்டங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் ஊற்றெடுத்து வருகிறது. மேலும் ஏலச்செடிகளுக்கு தண்ணீர் தேவை குறைந்துள்ளது. வெயில் இல்லாமல் மேகமூட்டமாக காணப்படுவதால், ஏல விவசாயிகள் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர்.ஏல விவசாயிகள் கூறியதாவது: சமீபத்தில் பெய்த மழை ஏல விவசாயத்திற்கு வரப்பிரசாதமாகும். இனி மே மாதம் மட்டுமே பிரச்னை. அதற்கு பிறகு தென்மேற்கு பருவ மழை பெய்து விடும். மேலும் இப்போது பெய்துள்ள மழையே சில வாரங்களுக்கு தாக்கு பிடிக்கும். எனவே ஏலச் செடிகளில் காய்கள் நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. ஏல விவசாயம் ஆபத்திலிருந்து தப்பித்து விட்டது, என்றார்.

**வரத்து குறைவால் பீன்ஸ் விலை ஏற்றம்**

வேலூர்வேலூர் மார்க்கெட்டில்:, வரத்து குறைவால், பீன்ஸ் விலை கடுமையாக உயர்ந்துள்ளதுஏப்ரல் முதல் வாரத்தில்., வேலூர் மார்க்கெட்டில், மொத்த விற்பனை கடைகளில், ஒரு கிலோ பீன்ஸ், 30 ரூபாய்க்கும், சில்லறை விற்பனை கடையில், 45 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டதுநேற்று., பீன்ஸ் விலை திடீரென உயர்ந்ததுமொத்த . விற்பனை கடைகளில், ஒரு கிலோ பீன்ஸ், 75 ரூபாய்க்கும், சில்லறை விற்பனை கடைகளில், நூறு ரூபாய்க்கும் விற்பனை ய்யப்பட்டதுவேலூர் . மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் சங்க தலைவர் ரமணன் தமிழகத்தில்:கூறியதாவது, ஊட்டியில் விளையும் பீன்ஸ், கோவை, ஈரோடு, சேலம் ஆகிய மாவட்ட மக்களின் தேவைகளையும், கொடைக்கானலில் விளையும் பீன்ஸ் மதுரை, திருச்சி மாவட்ட தேவைகளை பூர்த்தி செய்கிறதுகர்நாடக மாநிலத்தில் இருந்து., சென்னைக்கும், ஆந்திராவில் இருந்து வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், புதுச்சேரி மார்க்கெட்டுக்கும், பீன்ஸ் விற்பனைக்கு வருகிறதுதற்போது ., கோடை காலம் தொடங்கி இருப்பதால், போதிய நீர் இன்றி, விளைச்சல் குறைந்துள்ளதுதினமும்., 200 டன்னாக இருந்த பீன்ஸ் வரத்து தற்போது, 50 டன்னாக குறைந்துள்ளதுஇதனால் ., விலை

அதிகரித்துள்ளதுஇன்னும் சில மாதங்களுக்கு ., பீன்ஸ் விலை குறைய வாய்ப்பில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

**பனை ஓலை விசிறி செய்யும் பணி தீவிரம்**

திருவெண்ணெய்நல்லூர்திருவெண்ணெய்நல்லூர் அருகே கோடையை : .சமாளிக்க பனை ஓலை விசிறி செய்யும் பணி தீவிரமாக நடந்தது பருவமழை பொய்த்ததால் இந்தாண்டு வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என வானிலை மையம் அறிவித்திருந்ததுஇதற்கிடையில் கோடை மழை . பல இடங்களில் பெய்ததால் வெயிலின் தாக்கம் குறைந்து மக்கள் மாவட்டத்தின் சில இடங்களில் மழை .மகிழ்ச்சியடைந்தனர் .இல்லாததால் பகலில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதுஇதை சமாளிக்க மின்சாரம் இல்லாத நேரங்களில் பனைஓலையால் செய்த விசிறியை பலர் விரும்புவர்ஆண்டு தோறும் கோடைக்காலங்களில் . தொடர்ந்து பனை ஓலை விசிறி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள திருவெண்ணெய்நல்லூரை அடுத்த மாதம்பட்டு கிராமத்தை சேர்ந்த கந்தசாமி,(60) கூறுகையில், சிறிய பனை மரத்தில் மட்டைகளை வெட்டி, 2 நாட்கள் படிய வைத்து பின், பனை ஓலை விசிறிகள் தயார் செய்கிறேன்இவை பண்ருட்டி ., திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் எட்டு ரூபாய்க்கு விற்கப்பகிறது கடைகளில் .10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்பனை செய்கிறார்கள் என தெரிவித்தார்.

**ரூ.70 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்**

ராசிபுரம்நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில்:, நேற்று நடந்த மஞ்சள் ஏலத்தில், 70 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனதுதமிழகத்தில்., ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளதுஒவ்வொரு வாரமும் ., செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும்தனியார் மஞ்சள் மண்டிகள் . உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர்மசாலா .

தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி நேற்று.செல்கின்றனர், நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,590 மூட்டைகள் விற்பனைக்கு வந்ததுவிரலி ரகம் ., குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,561க்கும், குறைந்த பட்சம், 8,169 ரூபாய்க்கு ஏலம் போனது . உருண்டை ரகம், அதிக பட்சம், 8,339க்கும், குறைந்த பட்சம், 7,029 ரூபாய்க்கும் ஏலம்போனதுஅதேபோல்., பனங்காலி ரகம், அதிக பட்சம், 20 ஆயிரத்து, 71க்கும், குறைந்த பட்சம், 12 ஆயிரத்து, 339 ரூபாய்க்கும் ஏலம் போனதுநேற்று நடந்த ஏலத்தகில் ., 1,590 மூட்டை மஞ்சள், 70 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

**பயறு வகை சாகுபடிஅதிகரிக்க அழைப்பு**

பட்டுக்கோட்டைதஞ்சை மாவட்ட சேதுபாவாசத்திரம் வட்டார : வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்ட கோடை பருவத்தில்:அறிக்கை, கடைமடை பகுதியில் நல்ல மழை பெய்துள்ளது இதனை .பயன்படுத்தி, பயறு வகை பயிர்களை அதிகம் சாகுபடி செய்து பயன்பெற வேண்டும்புரத சத்து பற்றாக்குறையை . போக்க உளுந்து, பச்சை பயறு, துவரை போன்ற பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டும்இவ்வகை பயிர்களை தனிப் பயிராகவோ., பிற பயிர்களுடன் ஊடு பயிராகவோ, கலப்பு பயிராகவோ, வரப்பு பயிராகவோ பயிரிட்டு மகசூலை அதிகரிக்க வேண்டும்சராசரியாக . நாளொன்றுக்கு ஒருவருக்கு, 85 கிராம் புரதச் சத்து தேவைப்படுகிறது . ஆனால், நாளொன்றுக்கு தற்போது, 36.5 கிராம் புரதச்சத்து மட்டுமே நமக்கு கிடைக்கிறது .48.5 கிராம் பற்றாக்குறை ஏற்படுகிறது . இக்குறையை போக்க உளுந்து, பாசிப்பயறு, துவரை, தட்டை பயறு, மொச்சை, கொண்டக் கடலை, பட்டாணி போன்ற பயறு வகை அதிகளவில் சாகுபடி செய்ய வேண்டும்.இவ்வாறு தெரிவித்தார்.

**மழை பெய்தும் விலை குறையவில்லை; விவசாயிகள் மகிழ்ச்சி**

திண்டுக்கல் : நத்தம் பகுதியில் தொடர்மழையால் கோபால்பட்டி மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. இருப்பினும் விலை குறையாததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நத்தம் பகுதியில் கணவாய்பட்டி, மேட்டுப்பட்டி, அய்யாபட்டி, செடிபட்டி, மெட்டணம்பட்டி, வேம்பார்பட்டி, பாறைப்பட்டி, வடுகபட்டி, ஜோத்தாம்பட்டி, லந்தக்கோட்டை, சாணார்பட்டி, அஞ்சுகுழிப்பட்டி உட்பட பல இடங்களில் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. நத்தம், சாணார்பட்டி, கோபால்பட்டி பகுதிகளில் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் செடியில் இருக்கும் தக்காளிகள் அழுகி விடும். விவசாயிகள் நஷ்டத்தை தவிர்க்க கோபால்பட்டி மார்க்கெட்டிற்கு அதிகளவு தக்காளியை கொண்டு வருகின்றனர்.நேற்று புதுக்கோட்டை, கொட்டாம்பட்டி, மேலூர் வியாபாரிகள் அதிகளவு வந்தனர். நேற்று 15 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ.250 முதல் ரூ.270 வரை விலை போனது. வரத்து அதிகமாக இருந்தும் விலை குறையாததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயி மூக்கன் கூறியதாவது: மழையால் தக்காளி வரத்து குறையும் என்ற அச்சத்தில் இருந்தோம். ஆனால் அதிகளவு வரத்து இருந்தது. இருப்பினும் கட்டுப்படியான விலை கிடைத்ததால் மகிழ்ச்சியே, என்றார்.

**பீன்ஸ் பயிரை தாக்கும் மஞ்சள் நோயால் பாதிப்பு**

தாண்டிக்குடி : கொடைக்கானல் மலைப்பகுதியில் சமீப காலமாக பீன்ஸ் பயிர் இலைகளில் மஞ்சள் நிற நோய் தாக்குதல் அதிகரித்து மகசூல் பாதித்துள்ளது.கொடைக்கானல், தாண்டிக்குடி மலைப்பகுதியில் ஏராளமான ஏக்கரில் குறுவிவசாயப் பயிரான பீன்ஸ் பயிரிடப்படுகிறது. முருங்கை, பட்டர், ரிங், சோனாலி உள்ளிட்ட வகைகளை விவசாயிகள் பயிரிடுகின்றனர். இப்பயிரில் சமீப காலமாக இலைகள் மஞ்சள் நிறமாக மாறி வளர்ச்சி பாதித்து மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது. இதனால் திரட்சியான காய்கள், பூ உருவாகாமல் மலட்டு தன்மை அடைகிறது.

மூலையூர் விவசாயி பழனிச்சாமி கூறுகையில்: ஒரு ஏக்கர் பரப்பில் "ரிங் பீன்ஸ்' பயிரிட்டுள்ளேன். வழக்கமாக பச்சை நிறமாக உள்ள இலைகள், பாதிப்பால் முழுமையும் மஞ்சள் நிறமாக உள்ளது. தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை பார்ப்பது அரிதாக உள்ளது. மர்மமாக உள்ள இந்த நோய் அவரையையும் பாதித்துள்ளது, என்றார்.தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலை தலைவர் ப்ரனிதா கூறுகையில்: இது வைரஸ் பாதிப்பின் அறிகுறியாக இருக்கலாம். வைரஸ் பாதித்த விதை, சத்து பற்றாக்குறை, வேர் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இலைகள் மஞ்சள் நிறமாக மாற வாய்ப்புள்ளது. "சவ்சவ்'வில் மொசைக் வைரஸ் பாதிப்பு இருக்கிறது. இதுகுறித்து பாதிக்கப்பட்ட பயிர்களை ஆய்வு செய்து கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என்றார்.

**காய்கறி உற்பத்தியில் 2வது இடத்தில் இந்தியா; கருத்தரங்கில் தகவல்**

கொடைக்கானல் : "உலகளவில் காய்கறி உற்பத்தியில் இந்தியா 2வது இடத்தை வகிப்பதாக' கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. கொடைக்கானல் மேல்மலை கிராமமான கவுஞ்சியில் புதிய காய்கறி உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில் நீடித்த, பாதுகாப்பான தோட்டக்கலை பயிர் வளர்ச்சிக்கான கடன் உதவி மற்றும் உள்கட்டமைப்பு கருத்தரங்கம் நடந்தது. திருச்சி கனரா வங்கி மைய அலுவலக உதவி பொது மேலாளர் கே. பழனிவேலு தலைமை வகித்தார். பி.டி.ஓ., குணசேகரன் முதன்மை உரையாற்றினார். கனரா வங்கி மேலாளர் பி.சரவணன், பஞ்சாயத்து துணைத்தலைவர் பொன்னுதுரை பங்கேற்றனர். காய்கறி உற்பத்தி நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மூர்த்தி பேசியதாவது: விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை அவர்களே சந்தைப்படுத்த, 500 விவசாயிகளை ஒருங்கிணைத்து புதிய காய்கறி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்காக, ரூ.1.5 கோடி ஒதுக்கப்பட்டு, ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 30 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. அறுவடைக்கு பிந்தைய கட்டமைப்பான

வேளாண்மை பொருட்கள் சேகரிப்பு மையம், சிப்பம் கட்டுதல், குளிர்சாதன கிடங்கு அமைத்தல் போன்றவற்றுக்கான நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளபட்டு வருகின்றன. காய்கறி உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியா முழுவதும் தினசரி 375 கோடி ரூபாய் காய்கறி வர்த்தகம் நடக்கிறது. அதில் தினசரி 130 கோடி ரூபாய் வரை அழுகி வீணாகிறது. இதனால் பாதிப்பது விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். மத்திய மாநில அரசுகள் மூலம் உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது, என்றார்

**தொடர்மழையால் காய்கறி விலை உயர்ந்தது**

பெரியகுளம் : தொடர்மழையால் பட்டர்பீன்ஸ், தக்காளி உட்பட காய்கறிகள் விலை உயர்ந்துள்ளது. பெரியகுளம் பகுதியில் சில தினங்களாக மழை பெய்து வருகிறது. இதனால் காய்கறிகளின் அறுவடை பாதித்துள்ளது. சில இடங்களில் தக்காளி, பச்சைமிளகாய் செடியிலே அழுகியது. இதனால் மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.கடந்த வாரம் கிலோ ரூ.5 க்கு விற்ற தக்காளி 25, கிலோ ரூ.5 க்கு விற்ற கத்தரிக்காய் 20 ஆகவும், ரூ.18 க்கு விற்ற உருளைக்கிழங்கு 25, ரூ.10 க்கு விற்ற நூக்கல் 20, ரூ.6 க்கு விற்ற பீட்ரூட் 10, ரூ.7 க்கு விற்ற புடலங்காய் 25, ரூ.15 க்கு விற்ற சின்னவெங்காயம் 20 என விலை உயர்ந்துள்ளது. மேலும் ரூ.12 க்கு விற்ற பெரிய வெங்காயம் 25, ரூ.10 க்கு விற்ற பச்சை மிளகாய் 20, ரூ.10 க்கு விற்ற முட்டைகோஸ் 25, ரூ.15 க்கு விற்ற கேரட் 30, ரூ. 20 க்கு விற்ற அவரைக்காய் 60, ரூ.25 க்கு விற்ற முருங்கைபீன்ஸ் 80, ரூ.10 க்கு விற்ற சவ்சவ்காய் 25, ரூ.10 க்கு விற்ற சுரைக்காய் 20, ரூ.10 க்கு விற்ற முள்ளங்கி 20 என விலை உயர்ந்துள்ளது. அனைத்து காய் களின் உச்சமாக ரூ. 40 க்கு விற்ற பட்டர்பீன்ஸ் 120 ஆக விலை உயர்ந்துள்ளது.

**ஸ்ரீவி.,யில் மழை**

ஸ்ரீவில்லிபுத்தூர் .ஸ்ரீவில்லிபுத்தூரில் நேற்று பரவலாக மழை பெய்தது : இம் .நேற்று மாலை மணிக்கு பெய்த மழை அரை மணி நேரம் பெய்தது மழையால் பஸ் ஸ்டாண்ட் சைக்கிள் ஸ்டாண்ட், பகுதியில் தண்ணீர் செல்ல முடியாமல் தேங்கி நின்றதால் மக்கள் சிரமமப்பட்டனர்மேற்கு . தொடர்ச்சி மலை பகுதியான செண்பகதோப்பு பகுதியிலும் பலத்த மழை இம்மழையால் வெப்பத்தின் .பெய்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர் .தாக்கம் குறைந்தது

**குமரி மாவட்டத்தில் எட்டு மணி நேரம் கொட்டி தீர்த்த மழை**

நாகர்கோவில் குமரி மாவட்டத்தில் நேற்று மதியம் :முதல் எட்டு மணி நேரம் கொட்டி தீர்த்த மழையால் மக்களின் சகஜ வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்பட்ட நிலையில் நேற்று காலை 11 மணிக்கு பின்னர் காலநிலை மாறியது குளிர்ந்த காற்று வீசிய நிலையில் .12 மணி வாக்கில் மழை பெய்ய தொடங்கியதுபின்னர் சீராக அதிகரித்த மழை . .இரவு எட்டு மணி வரை மழை நீடித்தது .மாலையில் கொட்டி தீர்த்தது பல .இதனால் நாகர்கோவில் நகரில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது .இடங்களிலும் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது சற்குணவீதியில் வீட்டு காம்பவுண்டு சுவர் இடிந்து இரண்டு பேர் காயமடைந்தனர். அக்ஷய திருதியையை முன்னிட்டு நகைக்கடைகளில் வாடிக்கையாளர்களுக்காக சிறப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்ததுமழை . காரணமாக வாடிக்கையாளர் வருகை கணிசமாக குறைந்து வியாபாரம் அணைகள் மற்றும் குளங்களுக்கு த .பாதிக்கப்பட்டதுண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் வேளாண் கருத்து கண்காட்சி

தர்மபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் வருகிற 24–ந்தேதி (வெள்ளிக் கிழமை) பகல் 11 மணிக்கு நடக்கிறது. இதையொட்டி அன்று காலை 10 மணிக்கு விவசாயிகள் அறியும் வண்ணம் வேளாண்மைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில், வேளாண் கருத்து கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் தருமபுரி மாவட் டத்தைச் சேர்ந்தவிவசாயிகள் கலந்துகொண்டு விவசாயம் சம்பந்த மான தங்களது குறைகளையும், கருத்துக்களையும் எடுத்துக்கூறி பயன டையும்படி கலெக்டர் விவேகானந்தன் கேட்டுக் கொண்டுள் ளார்.

## கோடை காலத்தில் நீர் சத்து தரும் சுவையான சாத்தூர் வெள்ளரிக்காய்

கோடை காலத்தில் உடலுக்குத் தேவையான நீர்சத்து தரும் சுவையான சாத்தூர் வெள்ளரிக்காய் விற்பனை மும்முரமாக நடந்து வருகிறது.

வெள்ளரிக்காய்

தமிழகம் முழுவதும் வெள்ளரிக்காய் இருந்தாலும் சாத்தூர் பகுதியில் கரிசல் காட்டில் மானவாரியாக பயிரிடப்படும் வெள்ளரிக்காய் மிகவும் சுவையாகவும், தனி ருசியாகவும் இருப்பது குறிப்பிட தக்கது.

கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை பொய்த்த காரணத்தினால் வெள்ளரிக்காய் விளைச்சல் குறைவான காரணத்தினாலும், கிணற்று நீர்மட்டம் குறைந்து விட்டதாலும் இந்த ஆண்டு வெள்ளரிக்காய் விளைச்சல் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது . ஆண்டு தோறும் மார்ச் மாதம் முதல் வாரத் தில் பயிரிடப்படும் வெள்ளரிக் காய் 50 நாட்களுக்குள் காய்க்க ஆரம்பித்து விடும் என்றும், 2 மாதம் வரை விளைச்சல் தரும்

என்றும், 1 ஏக்கரில் வெள்ளரி பயிரிட சுமார் ரூ.15 ஆயிரம் வரை செலவு ஆகின்றது என விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் போதிய மழை மற்றும் பாசனத்திற்கு தேவையான நீரின்றி பாதி பேர் வெள்ளரிக்காய் இந்த ஆண்டு பயிரிடவில்லை. வெள்ளரிக்காய் விளைச்சல் குறைவாக இருப்பதால் காய் ஒன்றுக்கு ரூ.1.25 வரை விலை நிர்ணயமாக்கப் படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

நீர்சத்து விவசாயிகள் தங்கள் நிலத் தில் பயிரிடும் வெள்ளரிக்காய் களை சாத்தூர் பஸ் நிலையம் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் பகுதியில் விற்று வருகின்றனர். மேலும் அதிக அளவில் பயிரிடும் வெள்ளரி விவசாயிகள் காய் களை மொத்தமாக விலை பேசி நெல்லை, தூத்துக்குடி, மார்த் தாண்டம், கோவைப் பகுதி களுக்கு பஸ் மற்றும் ரெயில் மூலம் அனுப்பி வைக்கின் றனர். சாத்தூர் வெள்ளரிக்காய் களுக்கு தனிச் சுவைக்கு காரணம் சாத்தூர் பகுதியில் உள்ள கரிசல் மண்தான் என்றும் கோடை காலத்திற்கு உடலுக்கு தேவை யான நீர் சத்தினை அளிக்கின்றது. மேலும் வெள்ளரிக்காய் நட்சத் திர ஓட்டல் மற்றும் அழகு சாதன நிலையத்திற்கு அதிகமாக அனுப்பி வைக்கப்படுகிறது. வெள்ளரிக்காயில் மருத்துவ குணங்கள் அதிகமான உள்ளன. இதில் ‘டி’ விட்டமின் சத்து அதிகமாக உள்ளது. இதில் 95 சதவீதம் நீர் சத்து உள்ளது.ரத்தத்தில் சர்க்கரை உள்ளவர் களுக்கு இது நல்ல மருந்தாக செயல்படுகிறது. மேலும் சரும நோய்களை தீர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் உடலில் ரத்த சுத்தி கரிப்பு, கொழுப்புச்சத்து, ரத்த அழுத்தத்தை குறைக்கும் புரத சத்தின் அதிகம் கொண்டுள்ள தாக இருக்கிறது. அரசு மானிய விலையில் விதைகள் மற்றும் பூச்சி மருந்து கள் வழங்கி சாத்தூர் மற்றும் அதை சுற்றியுள்ள வன்னிமடை, கொல்லபட்டி, கலிங்கப்பட்டி, கோசுகுண்டு, நத்தத்துப்பட்டி விவசாயிகளுக்கு வழங்கி வெள்ளரிக்காய் விளைச்சலை மேம்படுத்த உதவ வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுக் கப்பட்டு உள்ளது.

## சூரிய ஒளியில் இயங்கும் சொட்டுநீர் பாசன கருவி கண்டுபிடிப்பு

தர்மபுரி, : மத்திய, மாநில அரசுகள் விவசாயத்துறையை மேம்படுத்த பல்வேறு நவீன யுத்திகளை கையாண்டு வருகிறது. ஆட்கள் பற்றக்குறை உள்ளிட்டவைகளால், வேளாண் துறை உழவு, நாற்று நடவுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல் ஆகியவற்றிற்கு வேளாண் கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசு வழங்கும் இலவச மின்சாரம் மூலம் பாசனம் செய்து விவசாயம் காப்பாற்றப்படுகிறது. மின்சாரத்திற்கு சூரிய ஒளி மின்சாரம் பயன்படுத்த அரசு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்க கருவிகள் மானியத்தில் வழங்கப்படுகிறது. சூரிய ஒளியில் இயங்கும் விமானம் சமீபத்தில் இயக்கி சோதனை ஓட்டம் நடக்கிறது. இந்நிலையில், தர்மபுரி மாவட்டம் தொப்பூர் ஜெயலட்சுமி பொறியியல் கல்லூரி மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை மாணவர்கள் ஹரிகுமார், ஸ்டிபன், ராஜ், சதாசிவம் மற்றும் சுரேஷ் ஆகியோர் கொண்ட குழுவினர் சூரிய ஒளியை மின்சாரம் தயாரிக்கும் தகட்டிற்கு அனுப்பி, தகட்டில் இருந்து வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்கும் பேட்டரியில் சேமிக்கப்பட்டு, அதன் மூலம் இருசக்கர வாகனம் இயங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த பேட்டரி மூலம் வாகன மின்மோட்டார் இயங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதே சூரிய ஒளி மின்சாரத்தின் மூலம் தானியங்கி சொட்டுநீர் பாசன கருவி இயக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுதுகுறித்து மாணவர்கள் கூறியதாவது: சூரிய ஒளி தகட்டினை இருசக்கர வாகனத்தில் பொருத்தி, அதிலிருந்து சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றி பேட்டரிகளில் சேமிக்கப்படுகிறது. பிறகு பேட்டரி மூலம் மின்சாரமானது வாகன மோட்டாருக்கு கொடுக்கப்பட்டு

இயக்கப்படுகிறது. புகை இல்லாமலும், சத்தம் இல்லாமலும் இயங்கும். இந்த சூரிய ஒளி மின்சாரத்தின் மூலம் சொட்டுநீர் பாசனத்திற்கு பயன்படும் கருவிகள் இயக்கவும் பயன்படுகிறது. இந்த பாசனகருவி தானியங்கி மூலம் இயங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**ராயக்கோட்டையில் தக்காளி விலை உயர்வு**

ராயக்கோட்டை, : ராயக்ேகாட்டை மார்க்கெட்டில் தக்காளியின் விலை உயர்ந்துள்ளது. வெளியூர் வியாபாரிகள் வருகையால், இந்த விலையேற்றம் உருவாகியுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையில் தக்காளியை விசாயிகள் அதிகளவில் பயிர் செய்கின்றனர். ராயக்கோட்டை, கெலமங்கலம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமத்தில் சுமார் 100 ஏக்கரில் தக்காளி விளைவிக்கப்படுகிறது. இங்கு விளைந்த தக்காளிகளை ராயக்கோட்டை மார்க்கெட்டில் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இங்கு உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் தக்காளிகளை வாங்கி செல்கின்றனர். தற்போது, ராயக்கோட்டை தக்காளி மார்கெட்டில் வெளி மாநில வியாபாரிகள் வருகையால் தக்காளி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த சில மாதங்களாக வெளி மாநில வியாபாரிகள் வராத நிலையில் 25 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி,ரூ75 முதல் 150 வரை விற்கப்பட்டது. மேலும் வரத்தும் குறைவாக இருந்தது. ஆனால் தற்போது 20 நாட்களாகவே ராயக்கோட்டை மார்கெட்டிற்கு சுமார் 12 ஆயிரம் கூடை வரை தக்காளி வரத்து உள்ளது. மேலும் கேரளா வியாபாரிகள் வந்துள்ளதால், சென்ற வாரத்தில் இருந்து விலை அதிகரித்து காணப்பட்டது. அதாவது சென்ற வாரத்தில் இருந்து ஒரு கூடை தக்காளி ரூ250 விற்பனை செய்யப்பட்டது. இதில் ஒரு கூடை தக்காளி ரூ.300க்கு விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநில வியாரிகளும் வரத்தொடங்கினால் மேலும் விலை உயரும் என

எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ12க்கு விற்பனையானது.

**போச்சம்பள்ளியில் வரத்து அதிகரிப்பு சப்போட்டா கிலோ ரூ20க்கு விற்பனை**

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில் சப்போட்டா பழம் விற்பனை சூடுபிடித்துள்ளது. கிலோ ரூ.20க்கு விற்பதால், பொதுமக்கள் விரும்பி வாங்கிசென்றனர்.உடல் ஆரோக்கியத்திற்கு பழங்கள் முக்கிய பங்காற்றுகிறது. வெயில் காலத்தில், சரும பிரச்னைகள் மற்றும் உடல் சோர்வை நீக்க பழங்களை பொதுமக்கள் அதிகளவில் வாங்கி வருவது வழக்கம். இந்நிலையில், கடந்த வாரத்தில் கோடை மழை பெய்த நிலையில், தற்போது மீண்டும் வெயில் தலை காட்ட துவங்கி உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளிக்கு பெங்களூர், தர்மபுரி, திருப்பத்தூரில் இருந்து அதிகளவில் சப்போட்டா விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. சீசனுக்கு தகுந்தாற்போல் மா, பலா, ஆப்பிள், மாதுளை என பல விதமான பழங்களை விற்பனைக்கு வந்தாலும், நேற்று சப்போட்டா பழங்களை பொதுமக்கள் விரும்பி வாங்கி சென்றனர். கடந்த வாரத்தில் ரூ.30க்கு விற்பனை செய்த சப்போட்டா, இந்த வாரம் ரூ.20க்கு விற்பதால், பலர் வாங்கி சென்றனர்.

**மீன்வள தொழில்நுட்ப நிலையத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற விண்ணப்பிக்க அழைப்பு**

நாகை, : நாகை மீன்வள தொழில்நுட்ப நிலையத்தில் மின்னணு சாதன கருவி பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாகை தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வரும் மீன்வள தொழில் நுட்ப நிலையத்தில், மீன்வளத்தில் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு, மீன்பிடிப்பில் மின்னணு சாதன கருவிகளின் பயன்பாடு பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி 30

பேருக்கு வழங்கப்பட உள்ளது. பயிற்சி வருகிற 27ந்தேதி முதல் மே மாதம் 6ந்தேதி வரை 7 நாட்களுக்கு நடைபெறும். 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பயிற்சியில் சேர தகுதியானவர்கள். பயிற்சியில் சேர விரும்புவோர் 30 வயதிற்குள் இருக்க வேண்டும்.

இறால் பண்ணை உரிமையாளர்களுக்கான அடிப்படை இறால் வளர்ப்பு தொழில்நுட்பம் பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி 30 பேருக்கு அளிக்கப்பட உள்ளது. இப் பயிற்சி வருகிற 27ந்தேதி முதல் மே மாதம் 21ந்தேதி வரை 25 நாட்களுக்கு நடைபெறுகிறது. 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இறால் பண்ணை உதவியாளர்கள் பயிற்சியில் சேர தகுதியானவர்கள். வயது வரம்பு 30 வயதிற்குள் இருக்க வேண்டும். 20 நாட்கள் பண்ணையிலேயே தங்கி பயிற்சி பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பயிற்சிகளில் வகுப்பறை சொற்பொழிவு, களப்பயிற்சி, பண்ணை பணி ஆகிய பிரிவுகளில் தமிழில் பயிற்சி அளிக்கப்படும். உணவு மற்றும் தங்கும் வசதி செய்து தரப்பட மாட்டாது. பயிற்சியில் சேர விரும்புவோர், முதலாம் கடற்கரை சாலையில் உள்ள மீன்வளத் தொழில்நுட்ப நிலையம், நாகப்பட்டினம் 611 001 என்ற முகவரியில் நேரில் அல்லது 04365 240441, 240442 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு நாகை மீன் வளத் தொழில்நுட்ப நிலைய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.